# 3. அறிவிப்பு

### உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாலை சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறவிருப்பதால், மாலை 5–00 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்குச் சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1–58 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

*பிற்பகல் 4–30*

*மாலை 4–30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.*

# 2. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவல் துறை, தீயணைப்புப் பணிகள் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதம். திருமதி டி. யசோதா.

***திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 15–இன்மீதும், மானியக் கோரிக்கை எண் 16–இன்மீதும் நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை உங்கள் முன்னே சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால்,

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகுத்திக்
குறுகத் தறித்த குறள்"

என்று சொல்வார்கள். அதுபோல 61 பக்கங்களையும் எடுத்துக்கொண்டால்